*கவனிக்க.- 2019.05.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2123 - 2019 මැයි මස 10 වැනි සිකුරාදා - 2019.05.10
*2123 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 938 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 941 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மே மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

937- B81522 - 5,403 (2019/05)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## கொலொன்ன பிரதேச சபை

பொது மயான பூமிகளாக பிரயோகித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (வகிபாக) ஏற்பாட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய மயானபூமி மற்றும் அடக்கம் செய்தல் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்.*

*கொலொன்ன பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்துடன் தொடர்புடைய மயானபூமி மற்றும் அடக்கஸ்தள கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் முறையான அதிகாரம் உடையோனாகிய கொலொன்ன பிரதேச சபை சிபாரிசுக்கேற்ப 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பிரதேச சபை வகிபாக ஏற்பாட்டுச் சட்டத்தின் 02 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கௌரவ விடயத்துக்கான அமைச்சருக்கு சாட்டப்பட்டிருந்த அதிகாரங்கள் சப்பிரகமுவ மாகாண சபை கலைக்கப்பட்டதால் ஆளுநர் என்ற வகையில் எனக்கு சாட்டப்பட்டுள்ள உரிய அதிகாரங்களுக்கேற்ப கீழே 01 முதல் 10 வரையிலான அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி பூத உடல்கள் அடக்கம் செய்திடவோ தகனம் செய்திடவோ ஒதுக்கப்பட்ட பொது மயான பூமியாக பிரயோகிப்பதற்கு உத்தரவு விதிக்கின்றேன்.*

*தம்ம திசாநாயக்க,*
*ஆளுநர்,*
*சப்பிரகமுவ மாகாண சபை.*

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*புத்தளம்,*

### அட்டவணை 01

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | தலகஹவத்த ஹந்துவஹேன மயானபூமி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 202ஏ, ரன்ஹொட்டிகந்த |
| விஸ்தீரணம் | : | 0.1971 ஹெக்டயார் |
| காணியின் விபரம் | : | நில அளவை ஆணையாளரின் R/KLN/ 2013/760 ஆம் இலக்க வரைபின் 310 ஆம் இலக்க காணித்துண்டு |
| எல்லைகள் | : | வடக்கு : 247,307 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>கிழக்கு : 308 ஆம் இலக்க காணித்துண்டு;<br>தெற்கு : 311 ஆம் இலக்க காணித்துண்டு;<br>மேற்கு : 311, 247 ஆம் இலக்க காணித்துண்டுகள். |

### அட்டவணை 02

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | மொரகொட ருக்ஹேன மயானபூமி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 203 விஜேரிய |
| விஸ்தீரணம் | : | 0.4249 ஹெக்டயார் |
| காணியின் விபரம் | : | நில அளவை ஆணையாளரின் R/KLN/ 2013/759 ஆம் இலக்க வரைபின் 26 ஆம் இலக்க காணித்துண்டு |
| எல்லைகள் | : | வடக்கு : 112,113 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>கிழக்கு : 112 ஆம் இலக்க காணித்துண்டு;<br>தெற்கு : 112, 114 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>மேற்கு : 27, 114 ஆம் இலக்க காணித்துண்டுகள். |

**அட்டவணை 03**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | வெலேனேவத்த கொஸ்ருப்பஹேன மயானபூமி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 208 சீ ஹேனக்கொட |
| விஸ்தீரணம் | : | 0.2807 ஹெக்டயார் |
| காணியின் விபரம் | : | நில அளவை ஆணையாளரின் R/KLN/ 2013/649 ஆம் இலக்க வரைபின் 14 ஆம் இலக்க காணித்துண்டு |
| எல்லைகள் | : | வடக்கு : 13 ஆம் இலக்க காணித்துண்டு;<br>கிழக்கு : 11 ஆம் இலக்க காணித்துண்டு;<br>தெற்கு : பாதை மற்றும் 108 ஆம் இலக்க காணித்துண்டு;<br>மேற்கு : பாதை மற்றும் 12 ஆம் இலக்க காணித்துண்டு. |

**அட்டவணை 04**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | மடுவன்வெல மாயிம்தம்பேஹேன மயானபூமி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 205 பீ மடுவன்வெல பெரனிகம |
| விஸ்தீரணம் | : | 0.1416 ஹெக்டயார் |
| காணியின் விபரம் | : | நில அளவை ஆணையாளரின் R/KLN/ 2013/495 மற்றும் 643 ஆம் இலக்க வரைபின் 216 ஆம்இலக்க காணித்துண்டு |
| எல்லைகள் | : | வடக்கு : 215 ஆம் இலக்க காணித்துண்டு;<br>கிழக்கு : 215,181 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>தெற்கு : 181, 217 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>மேற்கு : 217, 215 ஆம் இலக்க காணித்துண்டுகள். |

**அட்டவணை 05**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | யக்மடித்த மினுஹேன மயானபூமி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 204 ஏ யக்மடித்த |
| விஸ்தீரணம் | : | 0.2447 ஹெக்டயார் |
| காணியின் விபரம் | : | நில அளவை ஆணையாளரின் R/KLN/ 2013/461 ஆம் இலக்க வரைபின் 77 ஆம் இலக்க காணித்துண்டு |
| எல்லைகள் | : | வடக்கு : 83, 147 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>கிழக்கு : 148 , 154 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>தெற்கு : 155 ஆம் இலக்க காணித்துண்டு;<br>மேற்கு : 79 ஆம் இலக்க காணித்துண்டு. |

**அட்டவணை 06**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | கபுகந்தகம கடிகல்லஹேன மயானபூமி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 205 ஏ புத்கந்த |
| விஸ்தீரணம் | : | 0.1973 ஹெக்டயார் |
| காணியின் விபரம் | : | நில அளவை ஆணையாளரின் R/KLN/2014/19 ஆம் இலக்க வரைபின் 68 ஆம் இலக்க காணித்துண்டு |
| எல்லைகள் | : | வடக்கு : 61, 66 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>கிழக்கு : 138 ஆம் இலக்க காணித்துண்டு;<br>தெற்கு : பாதை;<br>மேற்கு : 138 ஆம் இலக்க காணித்துண்டு. |

**அட்டவணை 07**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | நேதொலகந்த கெரகொப்புவ மயானபூமி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 205 ஏ புத்கந்த |
| விஸ்தீரணம் | : | 0.4233 ஹெக்டயார் |
| காணியின் விபரம் | : | நில அளவை ஆணையாளரின் R/KLN/2013/645 ஆம் இலக்க வரைபின் 206 ஆம் இலக்க காணித்துண்டு |
| எல்லைகள் | : | வடக்கு : 204 ஆம் இலக்க காணித்துண்டு;<br>கிழக்கு : 205, 208 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>தெற்கு : 196, 207 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>மேற்கு : 200, 197 ஆம் இலக்க காணித்துண்டுகள். |

**அட்டவணை 08**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | பொரலுவகெஅயின ஜம்புகஹ கும்புரகொட மயானபூமி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 206 ஏ பொரலுவகெஅயின |
| விஸ்தீரணம் | : | 0.1340 ஹெக்டயார் |
| காணியின் விபரம் | : | நில அளவை ஆணையாளரின் R/KLN/2013/646 ஆம் இலக்க வரைபின் 95 ஆம் இலக்க காணித்துண்டு |
| எல்லைகள் | : | வடக்கு : 111, 94 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>கிழக்கு : 217 ஆம் இலக்க காணித்துண்டு;<br>தெற்கு : 111, 217 ஆம் இலக்க காணித்துண்டுகள்;<br>மேற்கு : 111, 94 ஆம் இலக்க காணித்துண்டுகள். |

**அட்டவணை 09**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | கும்புருகமுவ மஹஹேன்யாய மயானபூமி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 208 பீ கும்புருகமுவ |
| விஸ்தீரணம் | : | 0.1492 ஹெக்டயார் |
| காணியின் விபரம் | : | நில அளவை ஆணையாளரின் R/KLN/2014/18 ஆம் இலக்க வரைபின் 07 ஆம் இலக்க காணித்துண்டு |
| எல்லைகள் | : | வடக்கு : 139 ஆம் இலக்க காணித்துண்டு;<br>கிழக்கு : 139 ஆம் இலக்க காணித்துண்டு;<br>தெற்கு : 139 ஆம் இலக்க காணித்துண்டு;<br>மேற்கு : 139 ஆம் இலக்க காணித்துண்டு. |

**அட்டவணை 10**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | மஹல்வின்ன தென்னகொட மல்கொரககஹஹேன மயானபூமி |
| கிராம அலுவலர் பிரிவு | : | 208 கும்புருகமுவ |
| விஸ்தீரணம் | : | 0.3313 ஹெக்டயார் |
| காணியின் விபரம் | : | நிலஅளவை ஆணையாளரின் R/KLN/2013/648 ஆம் இலக்க வரைபின் 24 ஆம் இலக்க காணித்துண்டு |
| எல்லைகள் | : | வடக்கு : பாதை;<br>கிழக்கு : 165 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் பாதை;<br>தெற்கு : 382 ஆம் இலக்க காணித்துண்டு;<br>மேற்கு : 95, 382 ஆம் இலக்க காணித்துண்டுகள். |

05-165

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு**

வடமேல் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படுகின்ற
இலங்கை ஆசிரிய சேவையில் 3 ஆம் வகுப்பில் 1(அ) ஆம் தரத்திலான வெற்றிடங்களுக்காக மாவட்ட அடிப்படையில்
பட்டதாரிகளை சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை– 2018

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காக சேர்த்துக் கொள்வதற்கு உரித்தாக 2018.12.14 ஆந் திகதி 2102 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 12-522/5 ஆம் இலக்க அறிவித்தலில் கீழ் காட்டப்பட்டுள்ள பந்தியினை திருத்தம் செய்யப்படுகின்றது.

பந்தி 7.4 நேர்முகப் பரீட்சை:-

இந்த வர்த்தமானியில் காட்டப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்று பரிசீலித்தல், உடல் மற்றும் உள, உடற் பயிற்சி பற்றி பரிசீலித்தல், பட்டச் சித்தி மற்றும் மேலதிக தகைமை பற்றி புள்ளிகள் வழங்குவதற்காக இந்த நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(அ) வகுப்பு சித்திக்காக புள்ளிகள் வழங்குதல் (ஆகக்கூடியது புள்ளிகள் 10)

I ஆம் வகுப்பு - 10 புள்ளிகள்
II ஆம் வகுப்பு மேல் தரம் - 07 புளளிகள்
III ஆம் வகுப்பு கீழ் தரம் - 05 புள்ளிகள்

(ஆ) வழங்கப்பட்டுள்ள பட்டம் செல்லுபடியாகும் ஆண்டுப்படி புள்ளிகள் வழங்குதல்.
(ஆகக் கூடியது புள்ளிகள் 12)

| பட்டம் செல்லுபடியாகும் ஆண்டு | புள்ளிகள் |
|---|---|
| 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன் பெறப்பட்ட பட்டத்திற்காக | 12 |
| 2014 ஆம் ஆண்டினுள் பெற்றுக் கொண்ட பட்டத்திற்காக | 08 |
| 2015 ஆம் ஆண்டினுள் பெற்றுக் கொண்ட பட்டத்திற்காக | 06 |
| 2016 ஆம் ஆண்டினுள் பெற்றுக் கொண்ட பட்டத்திற்காக | 04 |
| 2017 ஆம் ஆண்டினுள் பெற்றுக் கொண்ட பட்டத்திற்காக | 02 |
| 2018 ஆம் ஆண்டினுள் பெற்றுக் கொண்ட பட்டத்திற்காக | - |

(இ) மேலதிக தகைமைக்காக புள்ளிகள் வழங்குதல். (ஆகக்கூடியது புள்ளிகள் 10)

| தொடர் இலக்கம் | அளவுகோள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 01 | அறநெறி பாடசாலை இறுதிப் பரீட்சை சான்றிதழ் அல்லது வேறு சமயத்திற்காக அதற்கு சமமான மட்டத்தில் பரீட்சை சித்தியடைந்திருப்பது பற்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் பெற்றிருத்தல். | 05 |
| 02 | விளையாட்டு, அழகியல் ஆகிய விடயத்திற்கு சமமான செயற்பாட்டிற்காக அரசு அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய தரத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் வெற்றிக்கான சான்றிதழ் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ்கள் பெற்றிருத்தல். | 05 |
| | மொத்தம் | 10 |

(ஈ) கஷ்டப் பிரதேச செயலகப் பிரிவாக அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தரமாக குடியிருந்த காலம் குறைந்த பட்சம் 03 ஆண்டுகளை உறுதிப்படுத்தப்படுமாயின் அதற்காக 05 புள்ளிகள் வழங்கப்படும்.

(ஆகக்கூடியதுபுள்ளிகள் 05)

| குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கஷ்டப் பிரதேச செயலக பிரிவு | புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கஷ்டப் பிரதேச செயலக பிரிவு |
|---|---|
| நிக்கவெரடிய | புத்தளம் |
| ரஸ்நாயக்கபுர | கல்பிட்டிய |
| கொடவெஹெர | ஆணமடுவ |
| பொல்பிதிகம | கருவலகஸ்வெவ |
| எஹடுவெவ | மஹகும்புக்கடவல |
| கல்கமுவ | முந்தலம் |
| அம்பன்பொல | நவகத்தேகம |
| கிரிபாவ | பல்லம |
| மஹவ | வனாதவில்லுவ |
| | ஆரச்சிகட்டுவ |

02. இப் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான 2018.12.14 ஆந் திகதி 2102 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் 12-522/5 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஒழுங்கு விதிகள் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்படும்.

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு.

வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.
2019, மே 02.

05-431

---

**மத்திய மாகாண நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தில் தச்சு வேலையாள் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

மத்திய மாகாண நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தில் தச்சு வேலையாள் பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய மாகாணத்தில் வசிக்கின்ற தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொது நிபந்தனை - திறந்த ஆட்சேர்ப்புக்காக

1.1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் அவசியம்.

1.2. விண்ணப்பதாரி மத்திய மாகாணத்தில் வதிபவராக இருத்தல் வேண்டும்.

1.3 பரீட்சை சம்பந்தமாக தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடைசித் திகதிக்கு ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 03 வருடங்களாவது தொடர்ச்சியாக இம்மாவட்டத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் அவசியம்.

1.4 விண்ணப்பதாரி விசேட குணநலமுடையவராக இருத்தல் வேண்டும்.

1.5 பதவிக்காகத் தேவைப்படும் சகல கல்வி மற்றும் தொழில் தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் 2019.05.31 ஆந் திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

2. வயதெல்லை -

| பரீட்சையின் வகை | வயதெல்லை |
|---|---|
| திறந்த | 2019.05.31 ஆந் திகதிக்கு வயது 18 இற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாதவாறும் இருத்தல் அவசியம். (நிரந்தர அரச ஊழியர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.) |

3. கல்வி மற்றும் தொழில் தகைமை:

| கல்வித் தகைமை | தொழில் தகைமை |
|---|---|
| க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரு முறைகளுக்குக் கூடாமல் 02 பாடங்களுக்கு திறமை சித்தி உடன் ஆறு பாடங்களில் சித்தி (ஒரே தடவையில் குறைந்தது 06 பாடங்களிலாவது சித்தியடைந் திருத்தல் அவசியம்.) | தச்சுத் தொழில் பதவிக்கு நியமித்தவாறு மூன்றாந்தர மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுத்துள்ள வாறு தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) ஆகக் குறைந்தது 02 ஆம் தரத்தில் நிபுணத்துவம் பெற்றிருத்தல். |

4. அனுபவம்:- தச்சுவேலை சம்பந்தமாக ஆகக் குறைந்தது 02 வருடங்கள் அனுபவம் இருத்தல் அவசியம்.

5. உடற்கூற்றுத் தகைமை:- தெரிவு செய்யப்படும் உத்தியோத்தர்கள் மத்திய மாகாணத்தில் எந்தவொரு பகுதியிலும் வேலை செய்யத் தயாராக இருத்தல் அவசியம் என்பதோடு, நல்ல மனோபலத்துடனும், தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

6. ஆட்சேர்ப்பு முறை:- செயல்முறைப் (தொழில்) பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமும், திறமை அடிப்படையிலும்

செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

செயல்முறைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியனவற்றில் சித்தி பெற்றவர்களின் இரண்டு பரீட்சைகளிலும் கிடைக்கப்பெற்ற மொத்த புள்ளி அடிப்படையில் ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6.1 செயல்முறைப் பரீட்சை:-

| விடயம் | அதிகூடிய புள்ளி | சித்திப் புள்ளி |
|---|---|---|
| தனிநபர் ஆற்றல் | 20 | |
| இயந்திர செயற்பாடு | 30 | 40 |
| அடிப்படை உபயோகம் | 50 | |
| மொத்தம் | 100 | 40 |

6.2 நேர்முகப் பரீட்சை:-

| புள்ளிகள் பெற்றுத்தரும் பிரதான தலைப்பு | அதிகூடிய புள்ளி | சித்திப் புள்ளி |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமை | 25 | 40 |
| மேலதிக அனுபவம் | 40 | |
| மேலதிக தொழில் தகைமை | 20 | |
| பதவி சார்ந்த அறிவு | 10 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 | |
| மொத்தம் | 100 | 40 |

07. சம்பள அளவுத்திட்டம்:
அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இல் PL2 - 2016 சம்பள அளவுத்திட்டம் ரூபா 25,250.00-10x270-10x300-10x330-12x350- ரூபா 38,450.00 ஆகும். 2019.01.01 ஆந் திகதிக்கு ரூபா 22,642.00 ஆகும்.

08. சேவையில் அமர்த்தும் நிபந்தனை:-
இச்சேவை நிரந்தரமானது. இளைப்பாற்றுச் சம்பளம் உடனானது. உமக்கு உரித்தான இளைப்பாற்றுச் சம்பள முறை சம்பந்தமாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவிருக்கும் தீர்மானங்களுக்கு நீங்கள் உடன்பட வேண்டும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் நீங்கள் பங்குதாரர்களாக வேண்டும். பதவி சம்பந்தமாக ஆட்சேர்த்துக்கொள்ளும் விதத்தின் அடிப்படையில் சேவை நிபந்தனை மற்றும் ஏனையவை தீர்மானிக்கப்படும்.

09. விண்ணப்பிக்கும் முறை:-

1.1 விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை இவ்வறிவித்தலின் இறுதியிலிருக்கும் மாதிரிக்கு ஏற்ப A4 அளவினதான தாள் ஒன்றின் (செ.மீ. 21X29) இருபக்கத்தையும் பிரயோசனப்படுத்தி தொடர் இலக்கம் 1 - 5 வரை உள்ள பந்திகளை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 06 ஐ 2 ஆம் பக்கத்திலும் இலக்கம் 7 - 9 வரை மூன்றாம் பக்கத்திற்கும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கவும். தயாரித்த தமது விண்ணப்பங்களை 2019.05.31ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சு, இல. 41, கெற்றம்பே, பேராதனை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மத்திய மாகாண நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தில் தச்சு வேலையாள் III பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2019" என்று குறிப்பிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற தகவல் அறிவிக்கப்படமாட்டாது.

1.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட அறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கும் வேளையில் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என அறியப்பட்டால் அவ்வாறானவர்களுக்கு நியமனம் கிடைக்கப் பெறுவதற்கு உள்ள உரிமை செல்லுபடியற்றதாக்கப்படும். இந்த விண்ணப்பப்பத்திரம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவை அல்லது அவ்வறிவித்தலில் அறிவிக்கப்படாத வேறேதும் தகவல்கள் இருப்பின் அது சம்பந்தமாக மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முடிவே கடைசித் தீர்மானமாகும்.

மாதிரி விண்ணப்பப்படிவம் மத்திய மாகாண இளைஞர் அலுவல்கள், மகளிர், கிராம அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சு, மாகாண நெசவுக் கைத்தொழில் திணைக்கள அலுவலகத்தில் மற்றும் பிரதேசத்தில் உள்ள சகல நெசவு மத்திய நிலையங்களிலும் உள்ள அறிவித்தல் பலகைகளில் உள்ளன.

டப். எம். கே. கே. கருணாரத்ன,
செயலாளர்,
மத்திய மாகாண இளைஞர் அலுவல்கள்,
மகளிர், கிராம அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சு,
த.பெ. 41, கெற்றம்பே,
பேராதனை.

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தில் தச்சு வேலையாள் III ஆம் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

1. அ. முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர்:..........................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் உதா:- PERERA A.B.)

ஆ. முழுப்பெயர்: (சிங்களத்தில்/தமிழில்): ..........................................................................................

இ. முழுப்பெயர்: (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ..........................................................................................

ஈ. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

உ. தொலைபேசி இலக்கம் : அலுவலகம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

பிரத்தியேக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. அ. நிரந்தர முகவரி (சிங்களத்தில்) :..........................................................................................
..........................................................................................

ஆ. நிரந்தர வதிவு மாவட்டம் ( பொருத்தமான கூட்டிற்குள் √ அடையாளமிடுக.)

கண்டி ☐ மாத்தளை ☐ நுவரெலியா ☐

இ. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினமான 2019.05.31 ஆந் திகதிக்கு மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவு:-

வருடங்கள் ☐ மாதங்கள் ☐ நாட்கள் ☐

3. ஆண்/பெண்: ( பொருத்தமான கூட்டிற்குள் √ அடையாளமிடுக.)

பெண் ☐ ஆண் ☐

4. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம்: (பொருத்தமான கூட்டிற்குள் √ அடையாளமிடுக.)

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

5. பிறந்த தினம்:

ஆண்டு ☐ மாதம் ☐ திகதி ☐

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியாகிய 2019.05.31ஆந் திகதிக்கு வயது:

வருடங்கள் : .......................... மாதங்கள் : ...................... நாட்கள் : ..........................

6. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்: (விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில் 3-ஆம் பந்திக்கு ஏற்ப)

க.பொ.த.(சா.த.) பரீட்சை
வருடம் ................................ பரீட்சை சுட்டெண்: ...............................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. .......................................... | ............................. |
| 2. .......................................... | ............................. |
| 3. .......................................... | ............................. |
| 4. .......................................... | ............................. |
| 5. .......................................... | ............................. |
| 6. .......................................... | ............................. |
| 7. .......................................... | ............................. |
| 8. .......................................... | ............................. |

க.பொ.த.(உ. த.) பரீட்சை
வருடம் ................................ பரீட்சைச் சுட்டெண்: ...............................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. .......................................... | ............................. |
| 2. .......................................... | ............................. |
| 3. .......................................... | ............................. |
| 4. .......................................... | ............................. |
| 5. .......................................... | ............................. |

6.2 தொழில் தகைமை (விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில் 3ஆம் பந்திக்கு ஏற்ப)

6.2.1 பயிற்சி பாடநெறியின் பெயர்:- ................................................................................

பயிற்சி பாடநெறியின் காலக்கெடு: ........................................... இலிருந்து .................................... வரை
நிறுவனம்: ..................................................... சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி:-...............................

6.2.2 அனுபவம் சம்பந்தமான விபரம் :

நிறுவனம்: ..................................................................................
காலக்கெடு: ........................................... இலிருந்து .................................... வரை

7. ......................................................................................................... ஆகிய என்னால் இந்த விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியெனவும் உண்மையெனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் ஏதேனும் பிழை என்று தெரியவரின் மத்திய மாகாண நெசவுத் திணைக்களத்தில் தச்சு வேலையாள் பதவி III க்கு நான் தகுதியற்றவனாக்கப்படுவதற்கும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என்பதனையும் நான் நன்கு அறிவேன்.

திகதி : ...........................................  ....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (அவசியமற்ற வசனங்களை நீக்கவும்)

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு. ...................................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிமுகமானவர் எனவும், அவர் ................................. ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதியளிக்கின்றேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர்: ..............................................................................
கையொப்பம்: ..............................................................................
பதவி மற்றும் தகுதி இலச்சினை: ..............................................................................

(இந்த உறுதிசெய்தல், அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்திய பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணியொருவர்/முப்படை அதிகாரி அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரொருவர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றினை வகிக்கும் உத்தியோகத்தரொருவர், வருடத்திற்கு ரூபா452,916.00 க்குறையாத அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம் பெறுகின்ற நிரந்தர பதவியிலுள்ள அரசாங்க /மாகாண சேவையிலுள்ள அதிகாரியொருவரின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

9. அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்காக திணைக்களத் தலைவரின் சான்றுரை:- (பொருத்தமற்ற வசனங்களை வெட்டிவிடவும்)

திரு./திருமதி/செல்வி .............................................................................................. இந்த திணைக்களத்தில் ...................................... ஆக சேவையிலீடுபட்டுள்ளார். இப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர்கள் சேவைக் காலத்திற்குள் எவ்வித தண்டனைகளுக்கும் உட்படவில்லை என சான்று பகர்வதோடு, அவர்களினால் விண்ணப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி முன் வைக்கிறேன்.

................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ இலச்சினை)

திகதி : ............................

05-305/1

---

**மத்திய மாகாண நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தில் நெசவுத் தொழில் போதனாசிரியர் III ஆம் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

மத்திய மாகாண நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தில் நெசவுத் தொழில் போதனாசிரியர் பதவிக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய மாகாணத்தில் வசிக்கின்ற தகைமையுடைய ஆண்/பெண் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொது நிபந்தனை - திறந்த ஆட்சேர்ப்புக்காக

1.1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் அவசியம்.

1.2. விண்ணப்பதாரி மத்திய மாகாணத்தில் வதிபவராக இருத்தல் வேண்டும்.

1.3 பரீட்சை சம்பந்தமாக தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடைசித் திகதிக்கு ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 03 வருடங்களாவது தொடர்ச்சியாக இம்மாவட்டத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் அவசியம்.

1.4 விண்ணப்பதாரி விசேட குணநலமுடையவராக இருத்தல் வேண்டும்.

1.5 பதவிக்காகத் தேவைப்படும் சகல கல்வி மற்றும் தொழில் தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் 2019.05.31 ஆந் திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

2. பொது நிபந்தனைகள் : மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்காக

2.1 விண்ணப்பதாரி விசேட குணநலமுடையவராக இருத்தல் வேண்டும்.

2.2 விண்ணப்பதாரி அரச சேவையில் நிரந்தர பதவியை வகிக்க வேண்டுமென்பதுடன் அவற்றில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் அவசியம். (தற்போது நெசவு மத்தியஸ்தானங்களில் பணியாற்றுபவர்களுக்கு இது ஏற்புடைத்தாகாது)

2.3 தொடர்ந்து 05 வருடங்களாக அரசாங்க சேவையில் திருப்திகரமான சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரமான ஊழியராக இருத்தல் அவசியம் என்பதுடன், அது திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (தற்போது நெசவு மத்தியஸ்தானங்களில் பணியாற்றுபவர்களுக்கு இது ஏற்புடைத்தாகாது)

2.4 பதவிக்காக ஆட்சேர்ப்புக்கு உகந்த சகல கல்வி மற்றும் தொழில் தகைமை என்பன, 2019.05.31 ஆந் திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

3. வயதெல்லை -

| பரீட்சையின் வகை | வயதெல்லை |
|---|---|
| திறந்த | 2019.05.31 ஆந் திகதிக்கு வயது 18 இற்கு குறையாமலும் 30 க்கு மேற்படாதவாறும் இருத்தல் அவசியம். (நிரந்தர அரச ஊழியர்களுக்கு இவ் வயதெல்லை ஏற்புடையதாகாது.) |
| மட்டுப்படுத்தப்பட்ட | 2019.05.31 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறைவில்லாமலிருத்தல். |

4. கல்வி மற்றும் தொழில் தகைமை:

| வகை | கல்வி தகைமை | தொழில் தகைமை |
|---|---|---|
| திறந்த ஆட்சேர்ப்பு | சிங்களம்/தமிழ/ஆங்கிலம், கணிதம் மற்றும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சை யில் சித்தி மற்றும் க.பொ.த. (உ.த) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலேனும் (சாதாரண பொது பரீட்சையின்றி) சித்திபெற்றிருத்தல். | அரச நெசவுத் தொழில் திணைக்களத் தினால் வழங்கப்பட்ட ஒரு வருட அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கான குறிப்பிட்ட பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல். |
| மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு | மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது இரு திறமைச் சித்திகளுட்பட ஆறு பாடங்களில் (6) சித்தி. | அரச நெசவுத் தொழில் திணைக்களத் தினால் வழங்கப்பட்ட ஒரு வருட அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கான குறிப்பிட்ட பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல். |

5. அனுபவம்:

மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த ஆட்சேர்ப்புக்காக குறிப்பிட்ட கல்வி தகைமையுடனுள்ளவர்கள் ஒரு வருட பயிற்சிக்குக் கீழ் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6. உடற்கூற்றுத் தகைமை: மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த ஆட்சேர்ப்புக்காக

தெரிவு செய்யபப்படும் உத்தியோத்தர்கள் மத்திய மாகாணத்தில் எந்தவொரு பகுதியிலும் வேலை செய்யத் தயாராக இருத்தல் அவசியம் என்பதோடு, நல்ல மனோபலத்துடனும், தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

7. ஆட்சேர்ப்பு முறை:

எழுத்துமூல மற்றும் தொழில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும் என்பதுடன், வெற்றிட எண்ணிக்கையின் 70% திறந்த விண்ணப்பதாரிகளிடமிருந்தும், வெற்றிட எண்ணிக்கையின் 30% மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்தும் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

7.2 எழுத்துமூலப் பரீட்சை:-

| விடயம் | விடய விளக்கம் | அதிகூடிய புள்ளி | காலம் |
|---|---|---|---|
| நெசவு கணிதம் | கைத்தறி புடவை தயாரிப்பின்போது உபயோகப்படுத்தப்படும் கணித முறை பற்றிய அறிவை பரீட்சித்துப் பார்த்தல் | 100 | 1 1/2 மணி |
| இயந்திர அறிவு | கைத்தறி இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் மற்றும் உபகர ணங்களை அறிமுகப்படுத்தலும் அவற்றின் உபயோகம் சம்பந்தமான அறிவை பரீட்சித்தலும் | 100 | 1 1/2 மணி |
| சாதாரண அறிவு | கைத்தறி இயந்திரத்தின் உற்பத்தியின் வரலாறு புது மாதிரி யான விற்பனை முறைகள் மற்றும் முகாமைத்துவம் உள்ள டங்கலாக கைத்தறி நெசவுக் கைத்தொழில் பற்றிய சாதாரண அறிவை பரீட்சித்தல். | 100 | 1 1/2 மணி |
| வடிவமைத்தல் | கைத்தறி நெசவு இயந்திரத்தில் புடவை நெய்யும் போது உபயோகிக்கப்படும் சகல நெய்தல் முறை மற்றும் வடிவ மைத்தல் பற்றிய அறிவை பரீட்சித்தல் | 100 | 1 1/2 மணி |

பரீட்சையில் சித்தி பெறுவதற்காக சகல பாடங்களிலும் 40 வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் அவசியம். பரீட்சையின் முழுப் புள்ளி எண்ணிக்கையின் 50 வீதமாவது பெற்றிருத்தல் அவசியம்.

7.2 தொழில் பரீட்சை:
எழுத்துமூல பரீட்சையில் சித்திபெற்றவர்கள் தொழில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுவர். தொழில் பரீட்சையில் குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

| பாட நிர்ணயம் | அதிகூடிய புள்ளி | காலம் |
|---|---|---|
| 1. கைத்தறி புடவை நெய்தல், வடிவமைத்தல், நெய்தலுக்காக கைத்தறி இயந்திர மொன்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளல், அதற்காக உபயோகப்படுத்தும் உபகரணங்கள் பற்றிய அனுபவ அறிவைப் பரீட்சித்தல். | 100 | 30 நிமிடம் |
| 2. கொடுக்கப்படும் காலத்திற்குள் இயந்திர சாதனத்துடன் வழங்கப்படும் வடிவமைப் பிற்கேற்றவாறு நெய்தலின் இயலுமை பற்றி பரீட்சித்துப் பார்த்தல். | | |

8. நேர்முகப் பரீட்சை:

எழுத்துமூல மற்றும் தொழில் பரீட்சைகளில் பெற்ற புள்ளிகளைப் பெற்றதன் அடிப்படையில் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவர். இங்கு புள்ளிகள் வழங்கப்படாதென்பதுடன் தகைமை மட்டும் பரிசீலிக்கப்படும்.

9. சம்பள அளவுத்திட்டம்:

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இல் MN1 - 2016 சம்பள அளவுத்திட்டம்
ரூபா 27,140.00 -10X300-11X350 - 10X 495 - 10X660 - ரூபா 45,540.00 ஆகும். 2019.01.01 ஆந் திகதிக்கு ரூபா 24,336.00 ஆகும்.

10. சேவையில் அமர்த்தும் நிபந்தனை:

இச்சேவை நிரந்தமானது. இளைப்பாற்றுச் சம்பளம் உடனானது. உமக்கு உரித்தான இளைப்பாற்றுச் சம்பள முறை சம்பந்தமாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவிருக்கும் தீர்மானங்களுக்கு நீங்கள் உடன்பட வேண்டும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் நீங்கள் பங்குதாரர்களாக வேண்டும். பதவி சம்பந்தமாக ஆட்சேர்த்துக் கொள்ளும் விதத்தின் அடிப்படையில் சேவை நிபந்தனை மற்றும் ஏனையவை தீர்மானிக்கப்படும்.

11. விண்ணப்பிக்கும் முறை:

11.1 பரீட்சைக்கட்டணமாக ரூ. 500.00 மத்திய மாகாண சபை வருமான தலைப்பு 20-03-02-13 பிரதான செயலாளர் (மத்திய மாகாணம்) வரவு வைக்கப்படுவதற்கு அண்மையில் உள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்திற்குச் செலுத்தி கிடைக்கப்பெறும் பற்றுச்சீட்டை விண்ணப்படிவத்தோடு இணைத்து அனுப்பவும். எக் காரணங்கொண்டும் செலுத்திய பணம் திரும்ப மீளளிக்கப்படாது என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

11.2 விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை இவ்வறிவித்தலின் இறுதியிலிருக்கும் மாதிரிக்கு ஏற்ப A4 அளவினதான தாள் ஒன்றின் (செ.மீ. 21X29) இருப்க்கத்தையும் பிரயோசனப்படுத்தி தொடர் இலக்கம் 1 - 5 வரை உள்ள பந்திகளை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 06-07 வரை 2-ஆம் பக்கத்திலும் இலக்கம் 8 - 10 வரை மூன்றாம் பக்கத்திற்கும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கவும். தயாரித்த தமது விண்ணப்பங்களை 2019.05.31ஆந் திகதிக்கு முன்னர் செயலாளர், "மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சு, இல. 41, கெடம்பே, பேராதனை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மத்திய மாகாண நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தில் நெசவு போதனாசிரியர் III பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2019" என்று குறிப்பிடல் வேண்டும். (ஏற்கனவே மாகாண அரச நிரந்தர ஊழியர்கள் தமது திணைக்களத் தலைவர்களூடாக அனுப்ப வேண்டும்) தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற தகவல் அறிவிக்கப்படமாட்டாது.

11.3 விண்ணப்பதாரி குறிப்பிட்ட அறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கும் வேளையில் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யவில்லை என அறியப்பட்டால் அவ்வாறானவர்களுக்கு நியமனம் கிடைக்கப்பெறுவதற்கு உள்ள உரிமை செல்லுபடியற்றதாக்கப்படும். இந்த விண்ணப்பபத்திரம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவை அல்லது அவ்வறிவித்தலில் அறிவிக்கப்படாத வேறேதும் தகவல்கள் இருப்பின் அது சம்பந்தமாக மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் முடிவே கடைசித் தீர்மானமாகும்.

மாதிரி விண்ணப்பபடிவம் சகல பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும், மத்திய மாகாண இளைஞர் அலுவல்கள், மகளிர், கிராம அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சு, மாகாண நெசவுக்கைத்தொழில் திணைக்கள அலுவலகத்தில் மற்றும் பிரதேசத்தில் உள்ள சகல நெசவு மத்திய நிலையங்களிலும் உள்ள அறிவித்தல் பலகைகளில் தொங்கவிடப்பட்டிருப்பதோடு, WWW.moi.cp.gov.lk என்ற வலைத்தளத்தினூடாக தரவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும்.

டப். எம். கே. கே. கருணாரத்ன,
செயலாளர்,
மத்திய மாகாண இளைஞர் அலுவல்கள்,
மகளிர், கிராம அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சு,
த.பெ. 41, கெற்றம்பே,
பேராதனை.

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தில் நெசவுத் தொழில் போதனாசிரியர் III ஆம் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த /மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019**

1\. அ. முதலெழுத்துக்கள் கடைசியில் வரக்கூடியதாக பெயர்: ......................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் உதா:- PERERA A.B.)

ஆ. முழுப்பெயர்: (சிங்களத்தில்/தமிழில்): ......................................................................

இ. முழுப்பெயர்: (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ......................................................................

ஈ. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

உ. தொலைபேசி இலக்கம் அலுவலகம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

பிரத்தியேக :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2\. அ. நிரந்தர முகவரி (சிங்களத்தில்) :......................................................................
......................................................................

ஆ. நிரந்தர வதிவு மாவட்டம் ( பொருத்தமான கூட்டிற்குள் புள்ளடியிடுக)

கண்டி ☐ மாத்தளை ☐ நுவரெலியா ☐

இ. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்தினமான 2019.05.31ம் திகதிக்கு மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவு:-

வருடங்கள் : ☐ மாதங்கள் : ☐ நாட்கள் : ☐

3\. ஆண்/பெண்: ( பொருத்தமான கூட்டிற்குள் புள்ளடியிடுக)

பெண் : ☐ ஆண் : ☐

4\. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம்: (பொருத்தமான கூட்டிற்குள் புள்ளடியிடுக)

சிங்களம் : ☐ தமிழ் : ☐ ஆங்கிலம் : ☐

5\. பிறந்த திகதி :

ஆண்டு : ☐ மாதம் : ☐ திகதி : ☐

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியாகிய 2019.05.31ஆந் திகதிக்கு வயது:

வருடங்கள் : .......................... மாதங்கள் : ..................... நாட்கள் : .........................

6.1 கல்வி மற்றும் தொழில் தகைமைகள்: (விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில் 3-ஆம் பந்திகககு ஏற்ப)

க.பொ.த. (சா.த.) பரீட்சை
வருடம் ................................. பரீட்சைச் சுட்டெண்: ...............................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. .......................................... | ............................. |
| 2. .......................................... | ............................. |
| 3. .......................................... | ............................. |
| 4. .......................................... | ............................. |
| 5. .......................................... | ............................. |
| 6. .......................................... | ............................. |
| 7. .......................................... | ............................. |
| 8. .......................................... | ............................. |

க.பொ.த. (உ. த.) பரீட்சை
வருடம் ................................. பரீட்சைச் சுட்டெண்: ...............................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. .......................................... | ............................. |
| 2. .......................................... | ............................. |
| 3. .......................................... | ............................. |
| 4. .......................................... | ............................. |
| 5. .......................................... | ............................. |

6.2 தொழில் தகைமை (விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில் 4-ஆம் பந்திகககு ஏற்ப)

6.2.1 பயிற்சி பாடநெறியின் பெயர்:- ..................................................................................

பயிற்சி பாடநெறியின் காலக்கெடு: ........................................... இருந்து .................................... வரை

நிறுவனம்: ..................................................... சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி:-...............................

6.2.2 அனுபவம் சம்பந்தமான விபரம்

நிறுவனம்: ................................................................................

காலக்கெடு: ............................................ இருந்து ..................................... வரை

7. பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச்சீட்டிலக்கம்: .......................... பிரதேச செயலகம்: .................................

பரீட்சைக் கட்டணம் செலுத்திய திகதி: ...................................

| |
|---|
| பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழறாதவாறு ஒட்டவும். |

8. ............................................................................................................ ஆகிய என்னால் இந்த விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியெனவும் உண்மையெனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் ஏதேனும் பிழை என்று தெரியவரின் மத்திய மாகாண நெசவுத் திணைக்களத்தில் போதனாசிரியர் பதவி III க்கு நான் தகுதியற்றவனாக்கப்படுவதற்கும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என்பதனையும் நான் நன்கு அறிவேன்.

.................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி: ...........................................

9. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (அவசியமற்ற வசனங்களை நீக்கவும்)

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு. ...................................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிமுகமானவர் எனவும், அவர் ................................. ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதியளிக்கின்றேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர்: .............................................................................
கையொப்பம்: ................................................................................
பதவி மற்றும் தகுதி இலச்சினை: ..........................................................................

(இந்த உறுதிசெய்தல், அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்திய பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணியொருவர்/முப்படை அதிகாரி அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரொருவர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றினை வகிக்கும் உத்தியோகத்தரொருவர், வருடத்திற்கு ரூ. 452,916 இக்கு குறையாத அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம் பெறுகின்ற நிரந்தர பதவியிலுள்ள அரசாங்க /மாகாண சேவையிலுள்ள அதிகாரியொருவரின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

10. அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்காக திணைக்களத் தலைவரின் பரிந்துரை:- (பொருத்தமற்ற வசனங்களை வெட்டிவிடவும்)

திரு./திருமதி/செல்வி ...................................................................................... இந்த திணைக்களத்தில் ..................................... ஆக சேவையிலீடுபட்டுள்ளார். இப் பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர்கள் சேவைக் காலத்திற்குள் எவ்வித தண்டனைகளுக்கும் உட்படவில்லை என சான்று பகர்வதோடு, அவர்களினால் விண்ணப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி முன் வைக்கிறேன்.

................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
உத்தியோகபூர்வ இலச்சினையிடுக.

திகதி : ............................

05-305/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.